# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்

RNI-TNTAM/2023/88253

தினகனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:

94436 99066

namadhudhinakani@gmail.com


www.dhinakani.com









| Vol: 02 | Issue: 89 | 4 Pages | 28.10.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 89 | 4 பக்கங்கள் | 28.10.2024 | திங்கட்கிழமை | விலை ரூ. 6 | வருட சந்தா ரூ.1825 |

**செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்**
**இல்லதனின் தீய பிற**

**விளக்கம்:**
பலிக்காத இடத்தில் (தன்னை விட வலியவரிடத்தில்) சினம் கொள்வது தீங்கு. பலிக்கும் இடத்திலும் (மெலியவரித்திலும்) சினத்தைவிடத் தீயவை வேறு இல்லை.

## ஈரான் பதிலடி தாக்குதலுக்கு தயாராகிறது?



ஈரான், அக். 28

இஸ்ரேல் மீது ஈரான் பதிலடி தாக்குலுக்கு தயாராகி வருவதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இதுகுறித்து தி நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்ட செய்தியில், ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா காமேனி அந்த நாட்டின் பாதுகாப்பு படைகளுக்கு உத்தரவுகளை வழங்கி உள்ளார்.

நாமும் இஸ்ரேலுக்கு எதிரான போருக்கு தயாராக இருக்க வேண்டும். நம் நாட்டின் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தி டிரோன்கள் சேமித்து வைத்திருக்கும் இடங்களை சேதப்படுத்தினால் போரை தொடங்க வேண்டாம். அதேவேளையில் எண்ணெய் கிடங்குகள், எரிசக்திக்கான கட்டமைப்புகள், அணுசக்தி நிலையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினாலோ அல்லது மூத்த ராணுவ அதிகாரிகளை கொன்றாலோ நாம் உக்கிரமாக பதிலடி கொடுக்க வேண்டும் என்று அவர் கூறி உள்ளதாக தெரிவித்துள்ளது.

இதற்கிடையே இஸ்ரேலின் ஏவுகணைகளின் தாக்குதலுக்குப் பிறகு ஈரான் ராணுவம் எக்ஸ் வலைதள பக்கத்தில், ஏவுகணைகளின் புகைப்படத்தைப் பதிவிட்டுள்ளது.

## நியாயமா எனக்குதான் நோபல் பரிசு கொடுத்திருக்கனும்.. ஆனா ஒபாமாவுக்கு போயி.. டிரம்ப் ஆதங்கம்



அமெரிக்கா, அக். 28

அமெரிக்க அதிபர் தேர்தல் வாக்குப்பதிவு வரும் நவம்பர் 5 ஆம் தேதி நடைபெற உள்ளது. களத்தில் ஆளுங்கட்சி [டெமாகிரடிக்] சார்பில் நிற்கும் கமலா ஹாரிஸ் மற்றும் எதிர்க்கட்சி [ரிபப்லிக்] சார்பில் நிற்கும் டொனால்டு டிரம்ப் ஆகிய இருவரும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கமலா ஹாரிஸை ஆதரித்து முன்னாள் அதிபர் பராக் ஒபாமாவும் பிரச்சாரம் செய்து வருகிறார். இந்நிலையில் ஒபாமாவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு கொடுக்கப்பட்டது குறித்து டிரம்ப் விமர்சித்துள்ளார். நெவாடா நகரில் நடத்த மாற்றத்திற்காக ஒன்றிணைவோம் என்ற பிரச்சாரக் நிகழ்வில் பேசிய டிரம்ப், அவர்கள் ஒபாமாவுக்கு நோபல் பரிசு வழங்கியுள்ளனர்.

அந்த பரிசைதான் ஏன் பெற்றோம் என்பதற்கான காரணம் ஒபாமாவுக்கே தெரிந்திருக்காது. அவர் [தேர்தலில் வென்று] நிர்வாகம் செய்ய தொடங்கிய உடனே அந்த விருதை அவர் பெற்றுள்ளார். நான் அவரை விட மிகப் பெரிய, மிக சிறந்த, யூகிக்கவே முடியாத தேர்தலில் வெற்றி பெற்றேன், ஆனால் அவர்கள் ஒபாமாவுக்கு நோபல் பரிசை வழங்கியுள்ளார்கள் என்று தனது ஆதங்கத்தை டிரம்ப் வெளிப்படுத்தினார்.

பராக் ஒபாமாவுக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அப்போது ஒபாமாவின் இடத்தில் தான் உட்பட யார் இருந்திருந்தாலும் அவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கும் என்று டிரம்ப் இந்த கூட்டத்தில் பேசியுள்ளது விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று அதிபரானது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே சட்டவிரோத குடியேற்றங்களால் அமெரிக்கா உலகின் மிகப்பெரிய குப்பைத் தொட்டியாக மாறியுள்ளதாக டிரம்ப் தனது பிரச்சாரத்தின்போது பேசினார். அமெரிக்க அதிபர் தேர்தலை பொறுத்தவரை தற்போது சுமார் 2.5 கோடி பேர் முன்கூட்டியே தபால் மூலம் வாக்களித்து உள்ளதாக கூறப்படுகிறது.

## அமெரிக்காவின் மிகவும் வயதான பெண் உயிரிழந்தார்



அமெரிக்கா, அக். 28

அமெரிக்காவில் வாழும் மிகவும் வயதான நபரும், உலகின் மூன்றாவது வயதான நபருமான எலிசபெத் பிரான்சிஸ் தனது 115 வயதில் உயிரிழந்துள்ளார். அவர் தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை டெக்சாஸின் ஹூஸ்டனில் கழித்துள்ளார்.

1909ம் ஆண்டு ஜூலை 25ந்தேதி லூசியானாவில் எலிசபெத் பிரான்சிஸ் பிறந்தார். முதலாம் உலகப் போரிலிருந்து டைட்டானிக் கப்பல் மூழ்கும் வரை அனைத்தையும் அவர் நன்கு அறிந்திருந்தார். ஹூஸ்டனில் ஒரு காபி கடையை நடத்தி வந்தார். இவர் வாகனம் ஓட்டுவதை விட நடைபயிற்சி செய்வதை விரும்பினார். இதுவரை அவர் அமெரிக்காவில் 20 ஜனாதிபதிகளின் ஆட்சியை கண்டுள்ளார்.

இந்த ஆண்டின் முற்பகுதியில் தனது 115வது பிறந்தநாளில் நீண்ட மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கையை எவ்வாறு வாழ்வது என்பது குறித்த குறிப்பை பிரான்சிஸ் வழங்கி உள்ளார்.

முந்தைய நீண்ட ஆயுட்கால சாதனையாளரான எடி செக்கரெல்லி கலிபோர்னியாவில் தனது 116வது பிறந்தநாளுக்கு சில வாரங்களுக்குப் பிறகு இறந்ததை அடுத்து, எலிசபெத் பிரான்சிஸ் இந்த ஆண்டு பிப்ரவரியில் நாட்டின் வயதான நபராக முடிசூட்டப்பட்டார். ஏப்ரல் மாதம், LongeviQuest ல் இருந்து அமெரிக்காவில் மிகவும் வயதான நபராக அங்கீகரிக்கும் விருது அவருக்கு வழங்கப்பட்டது.

இப்போது, அமெரிக்காவின் மிக வயதான நபர் நவோமி வைட்ஹெட் ஆவார். அவர் செப்டம்பர் 26, 1910ல் பிறந்தார் என்று LongeviQuest தெரிவித்துள்ளது.

# பெரியாரின் கடவுள் மறுப்பு கொள்கையில் மட்டும் உடன்பாடு இல்லை: தவெக தலைவர் விஜய் பேச்சு



விழுப்புரம், அக். 28

தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் கட்சி தொடங்கியுள்ள நடிகர் விஜய், வரும் 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் தம் கட்சி போட்டியிடும் என்று அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார். இந்த நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு விக்கிரவாண்டியில் உள்ள வி.சாலையில் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் உரையாற்றி வருகிறார். அவர் கூறியதாவது:

பகுத்தறிவு புரட்சியாளர் தந்தை பெரியார் எங்கள் கொள்கைத் தலைவர். பெரியார் சொன்ன கடவுள் மறுப்பு கொள்கையை மட்டும் நாங்கள் கையில் எடுக்கப் போவதே இல்லை. எங்களுக்கு அதில் உடன்பாடு இல்லை. யாருடைய கடவுள் நம்பிக்கைக்கும் நாங்கள் எதிரானவர்கள் இல்லை. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதே எங்களுடைய நிலைப்பாடு. பெண் கல்வி, பெண்கள் முன்னேற்றம், சமூக சீர்திருத்தம், சமூக நீதி, பகுத்தறிவு சிந்தனை உள்ளிட்ட பெரியார் சொன்ன இவை அனைத்தையும் நாங்கள் முன்னெடுக்கப் போகிறோம்.

மதச்சார்பின்மைக்கும், நேர்மையான நிர்வாக செயல்பாட்டுக்கும் முன்னுதாரணமாக இருக்கும் பச்சைத்தமிழர் பெருந்தலைவர் காமராஜரை எங்கள் வழிகொட்டியாக ஏற்கிறோம். அடுத்தது எங்கள் கொள்கைத் தலைவர் அண்ணல் அம்பேத்கர். சமூகத்தில் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துபவர்கள் அம்பேத்கர் பெயரைக் கேட்டாலே நடுங்கிப் போய்விடுவார்கள். அவரை எங்கள் வழிகாட்டி என்று சொல்வதில் பெருமை கொள்கிறோம்.

பெண்களை கொள்கைத் தலைவர்களாக ஏற்று களத்தில் வரும் முதல் அரசியல் கட்சி தமிழக வெற்றிக் கழகம்தான். அந்தவகையில் நாம் இந்த மண்ணை கட்டி ஆண்ட பேரரசி வேலு நாச்சியார்,

இந்த மண்ணின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட அஞ்சலையம்மாள் இருவரும் நம்முடைய கொள்கைத் தலைவர்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# திருக்கோவிலூர் கோவில் தமிழ் சங்கம் 92 ஆம் ஆண்டு விழா



திருக்கோவிலூர், அக். 28

திருக்கோவிலூர் நகரத்தில் கோபால் தமிழ்ச்சங்கம் கபிலர் விழா,தமிழ் அறிஞர்களின் விழா எனபல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தி வருகின்றனர் அதில் ஒரு பகுதியாக திருக்கோவிலூர் கோவில் தமிழ் சங்கம் 92 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு தலைவர் சிங்கார.உதியன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

கோவல் தமிழ் சங்கத்தின் விழாவின் தொடக்கமாக கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள புலவர் கபிலர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

இக்கூட்டத்தில் தமிழின் சிறப்பை உணர்ந்து தமிழர்கள் அனைவரும் தமிழில் பேச வேண்டும் பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழில் பெயர் சூட்ட வேண்டும் என்றும் தமிழ் தாக்கக்கூடிய கடமை ஒவ்வொரு தமிழ் குடிமகனுக்கும் உண்டு என்று கூறினார்கள்.

இதில் பல்வேறு பள்ளிகளில் இருந்து பல மாணவர்கள் கலை நிகழ்ச்சி, கலந்து கொண்டு அசத்தினர்.

முன்னில வகித்தவர்கள் முருகன், செந்தில்குமார், சீனிவாசன், சம்பத், குணா, கல்யாண் குமார் முத்தமிழ் செல்வன், தேசப்பிரியன் மற்றும் கோக தமிழ் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மேல்மலையனூர் ஒன்றியத்தில் புதிய நாடக மேடை, ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம்: மக்கள் பயன்பாட்டிற்கு செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்



விழுப்புரம், அக். 28

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் செவலபுரை ஊராட்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 8.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நாடக மேடை கட்டிடமும், கொடுக்கன் குப்பம் ஊராட்சியில்தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 23.56 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் சசிகலா சங்கர், பூ சுந்தரி ச ந்தரராஜன்ஆகியோர்முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 31.56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நாடக மேடை மற்றும் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு அவர் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் சையத் முகமது,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,ஒன்றிய செயலாளர்கள் நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன், ஒன்றிய கவுன்சிலர்கள்காசியம்மாள் கோதண்டம், ரவிச்சந்திரன். ராஜா,முன்னாள் கவுன்சிலர் ராஜேந்திரன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஜி.பி.எஸ். முருகன்ஒன்றிய அவைத் தலைவர் ஆறுமுகம்,உதயகுமார்,துணைச்செயலாளர் ரகுராமன், நிர்வாகிகள் அரிதாஸ், எஸ்.பி.சம்பத், தோப்பு சம்பத்,செவலபுரை பூண்டி சங்கர்,இளையபெருமாள் திருமலை, நவின், நித்தீஷ், கொடுக்கன் குப்பம் சுந்தர் ,பச்சையப்பன், செல்வராஜ்,வீரமணி, ஏழுமலை, ரங்கசாமி, துரைசாமி, மாணிக்கம், கலைச்செல்வன்உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மஞ்சக்குடி சுவாமி தயானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் விபத்தில்லா தீபாவளியைக் கொண்டாடும் விதத்தில் கல்லூரி மாணவ, மாணவிகளுக்காக தீ பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருவாரூர், க.28

திருவாரூர் மாவட்டம், குடவாசல் தாலூக்கா, மஞ்சக்குடி சுவாமி தயானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் விபத்தில்லா தீபாவளியைக் கொண்டாடும் விதத்தில் கல்லூரி மாணவ மாணவிகளுக்காக தீ பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைப்பெற்றது. இந்நிகழ்வினை குடவாசல் தீயணைப்பு சேவை நிலையம் , கல்லூரியின் யூத் ரெட் கிராஸ் அமைப்புடன் இணைந்து 25.10.24 அன்று ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வினை கல்லூரியின் முதல்வர் முனைவர் ஹேமா துவக்கிவைத்துவரவேற்புரை வழங்கினார். குடவாசல் தீயணைப்பு நிலைய அலுவலக போக்குவரத்து அதிகாரி திரு. மானெஷா மற்றும் சிறப்பு நிலைய அலுவலர்திருமுத்துக்குமரன் தலைமையிலான தீயணைப்பு நிலைய அதிகாரிகள் மாணவர்களுக்கு பாதுகாப்பான முறையில் பட்டாசை வெடிப்பது மற்றும் தீயை அனைப்பது போன்ற ஒத்திகை நிகழ்ச்சியினை நடத்தி காட்டினர். இறுதியாக கல்லூரியின் யூத் ரெட் கிராஸ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஏழுமலை நன்றி கூறினார். இந்நிகழ்வில் 300கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் அடைந்தார்கள்

# கடற்கரையில் கிடந்த ரூ.2 கோடி மதிப்பு 'மெத்தபெட்டமைன்' பறிமுதல்



அதிராம்பட்டினம், அக். 28

தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் அடுத்த ராஜாமடம் ஊராட்சிக்கு உட்பட்ட கீழத்தோட்டம் கடற்கரையில் மர்மபொருள் கிடப்பதாக கடலோர காவல் குழும போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன்பேரில், பட்டுக்கோட்டை கடலோர காவல்குழும இன்ஸ்பெக்டர் மஞ்சுளா தலைமையில் சப்இன்ஸ்பெக்டர் பிச்சைவேம்பு, ராஜசேகர், அதிராம்பட்டினம் வருவாய் ஆய்வாளர் ஜெகதீசன், ராஜாமடம் வி.ஏ.ஓ. முருகேஸ்வரி ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். அப்போது அங்கு பார்த்த போது, கடற்கரை ஓரத்தில் பாலித்தீன் பையில் அந்த மர்மபொருள் கிடந்தது தெரியவந்தது.

பின்னர், வருவாய்துறையினர் முன்னிலையில் போலீசார் அந்த மர்மபொருளை கைப்பற்றி பிரித்து பார்த்தனர். அப்போது அது போதை பொருள் என்பது தெரியவந்தது. பின்னர், அது எந்த வகையான போதை பொருள்? என்பதை அறிய அதனை ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தனர்.

ஆய்வில் அந்த பார்சலில் இருந்தது 'மெத்த பெட்டமைன்' என்ற போதை பொருள் என்பது தெரியவந்தது. அதன் எடை 900 கிராம் என்றும், அதன் மதிப்பு ரூ.2 கோடி இருக்கும் எனவும் கூறப்படுகிறது. இதுகுறித்து அதிராம்பட்டினம் கடலோர காவல் குழும போலீசார் வழக்குபதிவு செய்து போதை பொருள் எங்கிருந்து கடத்தி வரப்பட்டது? கடத்தி வந்தவர் யார்? என்பன உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# எட்டயபுரம் ஆட்டுச்சந்தையில் ரூ.7 கோடிக்கு ஆடுகள் விற்பனை



எட்டயபுரம், அக். 28

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் உள்ள புகழ்பெற்ற ஆட்டுச் சந்தை வாரந்தோறும் சனிக்கிழமைகளில் கூடும்.

கிராமப்புறங்களில் வளரும் ஆடுகள் இந்த சந்தைக்கு கொண்டு வரப்படுவதால், நெல்லை, மதுரை, திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஆடுகள் வாங்க வியாபாரிகள் வருவார்கள். வாரந்தோறும் இங்கு சுமார் ரூ.2 கோடி வரை விற்பனை நடைபெறும்.

ரம்ஜான், தீபாவளி, பொங்கல், கிறிஸ்மஸ் மற்றும் திருமண முகூர்த்த காலங்களில் ஆடுகளை விற்பனை அதிகமாக நடக்கும்.


வருகிற 31ந்தேதி தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட உள்ளதையொட்டி நேற்று காலை முதல் எட்டயபுரம் சந்தைக்கு சுமார் 10 ஆயிரம் ஆடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. ஆடுகளைவாங்க வியாபாரிகளும், ஆடு வளர்ப்போரும் திரண்டிருந்தனர். ஆடுகள் கிலோ ரூ.800 என்ற விலையில் ரூ.7 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரை விற்பனையானது.

இதுகுறித்து ஆடு வாங்க வந்த வியாபாரி உதயகுமார் கூறும்போது, ''எட்டயபுரம் சந்தைக்கு நெல்லை, தூத்துக்குடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து அதிகளவு ஆடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. விலையும் கடந்தாண்டை விட அதிகமாகவே உள்ளது. ரூ.7 ஆயிரம் விலையுள்ள ஆடு ரூ.30 ஆயிரம் வரை விற்கப்பட்டது.

எட்டயபுரம் சந்தைக்கு இந்தஆண்டு வெள்ளாடுகள்,

நாட்டு செம்மறி ஆடுகள், மயிலம்பாடி, குறும்பை, சீனி ஆடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. வியாபாரிகளும் அதிகம் வந்துள்ளனர். ஆடுகளின் விலை தான் மிகவும் அதிகமாக உள்ளது. 10 கிலோ எடையுள்ள குட்டியை ரூ.10 ஆயிரம் வரை சொல்கின்றனர். இந்தாண்டு சுமார் 7 கோடி ரூபாய் வரை வர்த்தகம் நடைபெற்றுள்ளது என்றார்.

# ரேசன் கடைகளில் தீபாவளி சிறப்பு தொகுப்பு விற்பனை அமைச்சர் பெரியகருப்பன்



ஸென்னை, அக். 28

தீபாவளி பண்டிகை இந்த ஆண்டு வருகிற அக்டோபர் 31ந்தேதி கொண்டாடப்பட இருக்கிறது.

பொதுமக்கள் அனைவரும் தீபாவளிப் பண்டிகையினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அரசு பல்வேறு முன்னேற்பாடுகள் செய்து வருகிறது. அந்த வகையில், மக்கள் ரேஷனில் பொருட்களை பெறும் வகையில் அனைத்து முழு நேர மற்றும் பகுதி நேர ரேஷன் கடைகளும் 27 ந்தேதி முழுவதுமாகவழக்கம்போல் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

★ தமிழகம் முழுவதும் உள்ள கூட்டுறவு விற்பனை பண்டக சாலைகள் மூலம் தீபாவளி சிறப்பு தொகுப்பு விற்பனை செய்யப்பட உள்ளது.

★ பண்டக சாலை, 65 சுயசேவை பிரிவு மற்றும் 54 பல்பொருள் அங்காடிகளில் 28ந்தேதி முதல் தீபாவளி சிறப்பு தொகுப்பு விற்பனை செய்யப்படும்.

★ அரை கிலோ பச்சரிசி, பாகு வெல்லம், மைதா மாவு, எண்ணெய் உள்ளிட்ட அதிரசம் முறுக்கு காம்போ 190க்கு விற்பனை செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.


# ரேசன் கடைகளில் தீபாவளி சிறப்பு தொகுப்பு விற்பனை அமைச்சர் பெரியகருப்பன்





ஸென்னை, அக். 28

தீபாவளி பண்டிகை இந்த ஆண்டு வருகிற அக்டோபர் 31ந்தேதி கொண்டாடப்பட இருக்கிறது.

பொதுமக்கள் அனைவரும் தீபாவளிப் பண்டிகையினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அரசு பல்வேறு முன்னேற்பாடுகள் செய்து வருகிறது. அந்த வகையில், மக்கள் ரேஷனில் பொருட்களை பெறும் வகையில் அனைத்து முழு நேர மற்றும் பகுதி நேர ரேஷன் கடைகளும் 27 ந்தேதி முழுவதுமாகவழக்கம்போல் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

★ தமிழகம் முழுவதும் உள்ள கூட்டுறவு விற்பனை பண்டக சாலைகள் மூலம் தீபாவளி சிறப்பு தொகுப்பு விற்பனை செய்யப்பட உள்ளது.

★ பண்டக சாலை, 65 சுயசேவை பிரிவு மற்றும் 54 பல்பொருள் அங்காடிகளில் 28ந்தேதி முதல் தீபாவளி சிறப்பு தொகுப்பு விற்பனை செய்யப்படும்.

★ அரை கிலோ பச்சரிசி, பாகு வெல்லம், மைதா மாவு, எண்ணெய் உள்ளிட்ட அதிரசம் முறுக்கு காம்போ 190க்கு விற்பனை செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.


# 5 மாவட்ட மக்களே உஷார்... வெளுத்து வாங்கப்போகும் கனமழை



சென்னை, அக். 28

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழக பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால் இன்று தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

திண்டுக்கல், தேனி, தென்காசி,திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை முதல் வருகிற 1ந்தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35°36° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°27° செல்சியஸை ஒட்டியும் இருக்கக் கூடும். அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35°36° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°27° செல்சியஸை ஒட்டியும் இருக்கக் கூடும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# வெள்ள மீட்பு பணிகளை முடுக்கி விடுமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்த செல்லூர் ராஜு



மதுரை, அக். 28

மதுரை மாநகரில் நேற்று வரலாறு காணாத அளவிற்கு மழை பெய்துள்ளது. நேற்று மாலை ஒரு மணி நேரத்தில் மதுரை மாநகரில் மட்டும் 4.5 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது. குறைந்த மணி நேரத்தில் அதிகன மழை பெய்ததால் வெள்ள பாதிப்பு ஏற்பட்டு உள்ளது.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு நள்ளிரவு நேரத்தில் மதுரையில் பலத்த மழை கொட்டியது. இதன் காரணமாக செல்லூர் உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளில் குடியிருப்புகளை வெள்ளநீர் சூழ்ந்திருந்தது. அந்த தண்ணீரே வடியாத நிலையில் நேற்று பெய்த மழையால் மீண்டும் அப்பகுதி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இன்று காலை வரை செல்லூர், அய்யர் பங்களா, நரிமேடு, ஒத்தக்கடை உள்ளிட்ட பல்வேறு பகுதியில் தண்ணீர் வடியாததால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டது.

மாவட்ட நிர்வாகம் தண்ணீரை வெளியேற்றும் பணியை முடுக்கி விட்டுள்ளது. நவீன மின் மோட்டார்கள் மூலம் தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மதுரை மாநகர மக்களுக்கு இந்த பருவமழையால் பல்வேறு பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில் மதுரை செல்லூர் பகுதியில் நடைபெற்று வரும் வெள்ள மீட்பு பணிகளை அமைச்சர் மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அவரிடம் வெள்ள மீட்பு பணிகளை முடுக்கி விடுமாறு அதிமுக முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ கோரிக்கை விடுத்தார்.

அதிகாரிகளிடமும் வெள்ள மீட்பு பணிகள் தொடர்பாக முன்னாள் அதிமுக அமைச்சர் செல்லூர் ராஜூ வலியுறுத்தினார்.

அண்ணே எல்லாம் பண்ணிகிட்டு இருக்கோம் என அவரிடம் அமைச்சர் மூர்த்தி தெரிவித்தார்.

# மழையால் பாதிக்கப்பட்டுள்ள மதுரை மக்களுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்: ஜிகே வாசன்



சென்னை, அக். 28

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தமிழக அரசு மதுரையில் பெய்திருக்கும் கனமழையால் தேங்கியிருக்கும் தண்ணீரை வெளியேற்ற உடனடி பணிகளை, அவசியப் பணிகளை மேற்கொண்டு மதுரை மக்களைப் பாதுகாக்க வேண்டும். மேலும் தொடர் மழையின் தாக்கத்தில் இருந்து பொது மக்களைப் பாதுகாக்க தொடர் நடவடிக்கை தேவை. தமிழக அரசு மதுரை உள்ளிட்ட மற்றப் பகுதிகளில் மழை பெய்ததால் ஏற்பட்டுள்ள பாதிப்பில் இருந்து பொது மக்களைப் பாதுகாக்க வேண்டும்.

தென் மாவட்டங்களில் பரவலாக கனமழை பெய்து தாழ்வானப் பகுதிகளில் தண்ணீர் தேங்கிய நிலையில் மக்கள் அதிக சிரமத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக மதுரை மாநகர மக்கள் மழையால் தண்ணீர் தேங்கிய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மதுரை மாநகர மக்களுக்கு மாநகராட்சி பணிகளை முழுவீச்சில் மேற்கொண்டு, நிவாரணம் கொடுத்து அவர்களுக்கு உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா: பட்டங்களை வழங்கினார் கவர்னர்




நெல்லை, அக். 28

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக 31வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள வ.உ.சி அரங்கில் நடைபெற்றது.

விழாவுக்கு தமிழக கவர்னரும், பல்கலைக்கழக வேந்தருமான ஆர்.என். ரவி தலைமை தாங்கி தங்க பதக்கங்கள் பெற்ற 111 பேருக்கும், முனைவர் பட்டங்கள் பெற்ற 460 பேருக்கும் என மொத்தம் 571 பேருக்கு நேரடியாக படங்களை வழங்கினார்.

விழாவில் 33 ஆயிரத்து 821 பேர் பட்டங்கள் பெறுகின்றனர். இந்த பட்டமளிப்பு விழாவில் ஆண்டறிக்கையை பல்கலைக்கழக துணை வேந்தர்சந்திரசேகர்வாசித்தார்.

தொடர்ந்து தேசிய புவி அறிவியல் துறை இயக்குனர் சலபதி ராவ் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பேசியதாவது:

புதிய கல்வி கொள்கை உலக அரங்கில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. உலக அளவில் உள்ள மாணவர்களும் இந்தியாவில் வந்து கல்வி கற்கும் வகையில் இந்திய கல்வித்தரம் உயர்ந்துள்ளது.

இந்திய கல்வி அமைப்பு மிகப்பெரும் மேம்பாட்டை அடைந்துள்ளது. குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி பெறும் வகையில் கல்வி அமைப்பு நாட்டில் செயல்படுகிறது. உயர்கல்வியில்தொடர்ந்து இந்தியா மேம்பட்டு வருகிறது.

இந்திய சுதந்திரத்தின் நூற்றாண்டு விழா 2047ம் ஆண்டு கொண்டாடும் போது உலக அளவில் சமுதாய வளர்ச்சி, பொருளாதாரம் போன்றவைகளில் சூப்பர் பவர் என்ற நிலையில் உலக அளவில் இந்தியா அடையும் என்பதில் எவ்வித அய்யமும் இல்லை

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் தமிழக உயர்கல்வித்துறை அமைச்சரும், பல்கலைக்கழக இணை வேந்தருமான கோவி. செழியன் பங்கேற்பார் என தெரிவிக்கப்பட்ட நிலையில் அவர் விழாவில் பங்கேற்காமல் புறக்கணித்தார். முன்னதாக தங்கப் பதக்கங்கள் பெற்ற மாணவமாணவிகளுடன் கவர்னர் ஆர்.என். ரவி குழு புகைப்படம் எடுத்து கொண்டார்.

விழாவில் தங்கப்பதக்கம் பெற்ற 111 பேரில் 97 பேர் பெண்கள் ஆவர். அதே போல் முனைவர் பட்டம் பெற்ற 460 பேரில் 377 பேர் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல்கலைகழகங்களில் முனைவர் பட்டம் பெறுபவர்களில் 337 பெண்கள் இடம் பெற்றிருப்பதும், அதிகளவிலான பெண்கள் முனைவர் பட்டம் பெற்றதும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இபிஎஸ் தவறான குற்றச்சாட்டை கூறுகிறார் மு.க.ஸ்டாலின்



சென்னை, அக்.28

மதுரையில் அமைச்சர்கள் தொடர்ந்து மீட்பு பணிகளை முடுக்கி விட்டுள்ளனர்.

அனைத்து ஊர்களிலும் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ மதுரையில் போர்க்கால அடிப்படையில் மீட்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ மதுரையில் அமைச்சர்கள் தொடர்ந்து மீட்பு பணிகளை முடுக்கி விட்டுள்ளனர்.

★ 8 இடங்களில் வெள்ளம் தேங்கி உள்ளது. வெள்ளத்தை அகற்றும் பணி நடந்து வருகிறது.

★ அனைத்து ஊர்களிலும் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருகின்றன.

மகளிர் உரிமைத் தொகை மாதந்தோறும் கடன் பெற்று திமுக அரசு வழங்கி வருவதாக இபிஎஸ் கூறி வருகிறாரே என்ற கேள்விக்கு,

தினமும் பத்திரிகையில் பெயர் வர வேண்டும் என்பதற்காக தவறான குற்றச்சாட்டுகளை இபிஎஸ் கூறி வருகிறார் என்று அவர் கூறினார்.

# தமிழ்த்தாய் வாழ்த்து பாடலில் பிழையை தடுக்க ஒத்திகை எடுப்பது முக்கியம் ஜி.கே.வாசன் வலியுறுத்தல்

சென்னை, அக். 28

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தேசிய கீதம் இந்தியாவிற்கு எப்படி பெருமை சேர்க்கிறதோ அதே போல தமிழ்த்தாய் வாழ்த்தும் தமிழகத்திற்கு பெருமை சேர்க்கிறது. இதனுடைய வரிகள், உச்சரிப்பு பாடும் போது மிக முக்கியம். இதில் பிழை என்பதே வரும் நாட்களில் எந்த விழாக்களிலும் இருக்கக் கூடாது. தேவைப்பட்டால் இதற்குண்டான ஒத்திகை எடுப்பதும் முக்கியம். தமிழ்த்தாய் வாழ்த்தில் அரசியல் கூடாது.

இதனுடைய நோக்கமே தமிழ்நாடு, தமிழ்வளர்ச்சி, தமிழ்பற்று. இதில் தவறு கண்டுபிடிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் ஆதாயத்திற்கும், விளம்பரத்திற்கும் மட்டுமே இருக்கக்கூடும். தேசிய கீதமும், தமிழ்த்தாய் வாழ்த்தும் இந்தியாவிற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்க்கும் பாடல்கள் என்பதால் சரியாகப் பாட வேண்டும் என்பதையே குறிக்கோளாகக்கொண்டு செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தவெக மாநாட்டிற்கு விசிக துணை பொதுச்செயலாளர் வாழ்த்து

விழுப்புரம், அக். 28

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் உள்ள வி.சாலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு பிரம்மாண்டமாக இன்று மாலை 4 மணிக்கு நடைபெற உள்ளது.

மாநாட்டு திடலில் சுமார் ஒரு லட்சம் பேர் அமர்ந்து பார்க்கும் வகையில் இருக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பிரம்மாண்டமாக காட்சி அளிக்கும் மாநாட்டு திடலில் அதிகாலை முதலே பல்வேறு பகுதிகளில் இருந்து தொண்டர்கள் குவிந்து வருகின்றனர். இந்நிலையில் நடைபெற உள்ள தமிழக வெற்றிக் கழக மாநாட்டிற்கு விசிக துணை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜூனா வாழ்த்து தெரிவித்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: கொள்கைரீதியான அரசியல் களத்தில் முக்கிய பங்காற்றிட விஜய்யின் இந்த மாநாடு வெற்றி பெற வேண்டும்.

பெரியார், காமராஜர் வேலுநாச்சியார் உள்ளிட்டோரின் படங்களை வைத்து தமிழ் மக்களின் பொது மனநிலையை விஜய் வெளிச்சம் போட்டு காட்டியிருக்கிறார் என்று அவர் கூறினார்.

# மேட்டூர் அணை நீர்மட்டம் 106.48 அடியை எட்டியது



சேலம், அக். 28

தமிழக, கர்நாடக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக கடந்த சில நாட்களாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. நேற்று காலை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 33,148 கன அடியாக இருந்தது. இன்று காலையில் நீர்வரத்து சற்று குறைந்து வினாடிக்கு 30,475 கன அடி தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது.

அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு காவிரிஆற்றில்வினாடிக்கு 2,500 கன அடியும், கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு 600 கன அடி தண்ணீரும் திறந்து விடப்பட்டு வருகிறது. மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீரின் அளவை விட, அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு குறைவாக உள்ளதால் மேட்டூர் அணை நீர்மட்டம்படிப்படியாகஉயர்ந்து வருகிறது.

இன்று காலை 8 மணி அளவில் மேட்டூர் அணை நீர்மட்டம் 106.48 அடியாக உயர்ந்து உள்ளது. நீர் இருப்பு 73.49 டி.எம்.சி. யாக உள்ளது. மேட்டூர் அணை வேகமாக நிரம்பி வருவதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# அரசு ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சை பிரிவில் படுக்கையில் ஓய்வெடுத்த நாய்: பொதுமக்கள் அதிர்ச்சி



கோத்தகிரி, அக். 28

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் அரசு ஆஸ்பத்திரி உள்ளது. இந்த ஆஸ்பத்திரியானது உள் மற்றும் வெளி நோயாளிகள் பிரிவு உள்பட பல்வேறு சிறப்பு வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

இங்கு வெளிநோயாளிகள் பிரிவில் தினமும் 300க்கும்மேற்பட்டோர்வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். மேலும் சமீபத்தில் தான் ரூ.3 கோடியில் புதிய அவசர சிகிச்சை பிரிவு கட்டப்பட்டது. இந்தநிலையில் கோத்தகிரி அரசு ஆஸ்பத்திரிக்குள் தெருநாய் ஒன்று புகுந்தது. தொடர்ந்து அவசர சிகிச்சை பிரிவில் உள்ள படுக்கையில் ஏறி படுத்து ஓய்வெடுத்தது.

இதை அங்கு சிகிச்சைக்கு வந்த நோயாளி ஒருவர் புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டார். இந்த புகைப்படம் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. இந்த சம்பவம் பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து அவர்கள் கூறும்போது, கோத்தகிரியில் அரசு ஆஸ்பத்திரி, தாசில்தார் அலுவலகம் உள்பட பொது இடங்களில் தெருநாய்கள் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இதன் விளைவுதான், தற்போது நோயாளிகளின் படுக்கையில் தெருநாய் படுத்து ஓய்வெடுத்த சம்பவமும்.

எனவே தெருநாய்கள் தொல்லையை கட்டுப்படுத்த வேண்டும் என்றனர்.

# இந்திய அரசியல் வரலாற்றில் சாதனை படைத்த ஒரே மாநாடு! பிரேமலதா



சென்னை, அக். 28

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியை தொடங்கி முதல் மாநாட்டை அறிவித்தார். தமிழக மக்கள், அரசியல் கட்சியினர் அனைவரிடமும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்த மாநாடு இன்று விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் உள்ள வி.சாலையில் நடைபெறுகிறது.

வெற்றிக் கொள்கை திருவிழா என்று பெயர் குறிப்பிட்டு இந்த மாநாட்டு பணிகளை விஜய் கட்சியினர் முன்னெடுத்து கடந்த 20 நாட்களுக்கும் மேலாக தீவிரமாக பணி செய்து வந்தார்கள்.

85 ஏக்கர் பரப்பளவில் நடைபெறும்இந்தமாநாட்டுக்கு செல்வதற்கு 5 நுழைவு வாயில்களும், வெளியே செல்வதற்கு 15 வழிப்பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

விஜய் கட்சி மாநாட்டுக்கான பிரமாண்ட ஏற்பாடுகள் காரணமாக வி.சாலை பகுதி மட்டுமின்றி விழுப்புரம் மாவட்டமே விழாக் கோலம் பூண்டுள்ளது. எதிர்பார்ப்புடன் தொண்டர்கள் மாநாட்டிற்காக அதிகாலை முதலே குவிய தொடங்கி விட்டார்கள்.

இந்தநிலையில், தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எக்ஸ் தள பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டு கூறியிருப்பதாவது:

இந்திய அரசியல் வரலாற்றில்சாதனைபடைத்த ஒரே மாநாடு!

மதுரை தேமுதிக முதல் மாநாடு 150 ஏக்கர் நிலப்பரப்பில் 2.5லட்சர் சேர் போடப்பட்டு நடத்தப் பட்டது!

உட்கார இடம் இல்லாமல் மாநாட்டு பந்தலுக்கு வெளியே லட்சோப லட்ச தொண்டர்கள் குவிந்தனர்!

மொத்தம் 25லட்சம் பேர் கலந்து கொண்டனர்!

உலக சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது! என்று கூறியுள்ளார்.

# மெட்ரோ ரெயில் 2ம் கட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் மு.க.ஸ்டாலின்



சென்னை, அக். 28

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று சென்னை, நந்தனத்திலுள்ள சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் தலைமையகத்தில், சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். அவர் பேசியதாவது:

முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சி காலத்தில் 2007ம் ஆண்டு தமிழ்நாடு அரசும் ஒன்றிய அரசும் இணைந்து மெட்ரோ ரெயில் திட்டத்தின் முதல் கட்டப் பணிகளை தொடங்கினோம்.

22 ஆயிரத்து 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 54.1 கிலோ மீட்டர் நீளத்திற்கு 2 வழித்தடங்களில் இந்தத் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.

இந்த திட்டத்தினால் சென்னை மக்கள் பெரும் பயனடைந்து வருகின்றனர். நாள்தோறும் 3 லட்சத்து 10 ஆயிரத்திற்கும் மேல் பயணிகளுக்கு பலனளித்து இத்திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக 63 ஆயிரத்து 246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 118.9 கிலோ மீட்டர் நீளத்திற்கு 3 வழித் தடங்களில் இந்த மெட்ரோ ரெயில் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறோம். இது வரை 19 ஆயிரத்து 229 கோடி ரூபாய் செலவிடப்பட்டு இப்பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.

மெட்ரோ ரெயில் திட்டத்தின் முதல் கட்டம் செயல்படுத்தப்பட்ட அதே முறையில் இரண்டாவது கட்டப் பணிகளும் செயல்படுத்தப்பட வேண்டும் என்று நான் பலமுறை வலியுறுத்திய கோரிக்கையை ஏற்று, அதற்கான ஒப்புதலை அண்மையில் அளித்த பிரதமருக்கும் ஒன்றிய அரசுக்கும் முதற்கண் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இரண்டாவது கட்டத்திற்கான பணிகளை விரைந்து செயல்படுத்துமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன். இப்பணிகளை முடிக்க இலக்கிடப்பட்டுள்ள கால வரையறைக்குள் இந்தப் பணிகளை முடிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எனது அரசும், அலுவலர்களும் மேற்கொண்டு வருகின்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

# தமிழகம் முழுவதும் தீவிர கண்காணிப்பு தீபாவளி பாதுகாப்புக்கு 48 ஆயிரம் போலீசார்



சென்னை,அக்.28

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 4 நாட்களே இருக்கும் நிலையில் புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்புகள் ஆகியவற்றை வாங்குவதற்காக பொதுமக்கள் கடை வீதிகளில் அலை மோதுகிறார்கள்.

இதன் காரணமாக சென்னைஉட்படஅனைத்து முக்கிய நகரங்களிலும் தீபாவளிக்கு தேவையான பொருட்களை வாங்குவதற்கு மக்கள் அதிக அளவில் திரள்கிறார்கள்.

இதனால் ஜவுளிக் கடைகள், பட்டாசு கடைகள், இனிப்பு மற்றும் பலகார கடைகள் இருக்கும் பகுதிகளில் திருவிழா கூட்டம் போல மக்கள் கூடி வருகிறார்கள்.

சென்னையில் தி.நகர், பாரிமுனை, வண்ணாரப்பேட்டை, புரசைவாக்கம் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் கடந்த சில நாட்களாகவே மக்கள் அதிக அளவில் கூடி தங்களுக்கு தேவையானபொருட்களை வாங்கி வருகிறார்கள்.

தீபாவளிக்கு முந்தைய கடைசி ஞாயிற்றுக்கிழமையான நாளை சென்னை, திருச்சி, மதுரை, நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, உள்பட தமிழகத்தின் அனைத்து முக்கிய நகரங்களிலும் மக்கள் அதிக அளவில் கூடுவார்கள் என்பதால் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

இதன்படி மாநில முழுவதும் 48 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

போலீஸ் டி.ஜி.பி. சங்கர் ஜிவால் உத்தரவின் பேரில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகள் தலைமையில் முக்கிய கடைவீதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு போலீசார்தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள்.

கூட்ட நெரிசலை பயன்படுத்தி செயின் பறிப்பு, பிக்பாக்கெட் போன்ற குற்ற செயல்களில் ஈடுபடுபவர்களை பிடிப்பதற்கும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இதற்காக போலீசார் சாதாரண உடையில் கண்காணித்து வருகிறார்கள். தீபாவளி பொருட்களை வாங்க வரும் மக்கள் தங்களது வாகனங்களை முறையாக நிறுத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளன.

மக்கள் அதிகம் கூடும் இடங்களில் போக்குவரத்தை தடை செய்தும் போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சென்னை தி.நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவின் பேரில் கூடுதல் கமிஷனர் கண்ணன் மேற்பார்வையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர். 7 இடங்களில் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

3 இடங்களில் காவல் உதவி மையமும் ஒரு தற்காலிக கட்டுப்பாட்டு அறையும் அமைக்கப்பட்டு உள்ளது. ஏற்கனவே நூற்றுக்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ள நிலையில் கூடுதலாக 75 கேமராக்கள் நிறுவப்பட்டு அதன் மூலமாக கூட்டத்தை போலீசார் கண்காணித்து வருகிறார்கள்.

2 டிரோன் கேமராக்களை பறக்கவிட்டு போலீசார் கண்காணிக்கிறார்கள். கூட்ட நெரிசலில் காணாமல்போகும்குழந்தைகளை கண்டுபிடிப்பதற்காக தொலைபேசி எண்கள் அடங்கிய வளையம் குழந்தைகளின் கைகளில் அணிவிக்கப்பட்டு வருகிறது.

கூட்ட நெரிசலில் பிக்பாக்கெட் மற்றும் வழிப்பறி கொள்ளையர்களை கண்டு பிடிப்பதற்காக அவர்களை அடையாளம் காட்டிக் கொடுக்கும் 64 கேமராக்களும் தனியாக நிறுவப்பட்டு உள்ளன.

இந்த கேமராக்கள் குற்றவாளிகள் கூட்டத்துக்குள் புகுந்தால் அவர்களை உடனடியாக காட்டிக் கொடுத்து விடும். அதே நேரத்தில் சாதாரண முறையில் 15 காவலர்கள் அடங்கிய 5 தனிப்படையும் அமைக்கப்பட்டுள்ளது. இவர்களும் கூட்ட நெரிசலில் மக்களோடு மக்களாக கண்காணித்து வருகிறார்கள். தி. நகர், வண்ணாரப்பேட்டை, புரசைவாக்கம், பாரிமுனை ஆகிய இடங்களில் மொத்தமாக 17 கண்காணிப்பு கோபுரங்களை போலீசார் அமைத்து உள்ளனர்.

அங்கிருந்தபடியேசுழற்சி முறையில் போலீசார் பைனாகுலர் மூலமாக கண்காணித்து சந்தேக நபர்களின் நடமாட்டம் தெரிந்தால் உஷார் படுத்துகிறார்கள். 19 இடங்களில் ஒலிபெருக்கிகள் மூலமாக பொதுமக்கள் உஷாராக இருக்கும்படியும் போலீசார் எச்சரிக்கை செய்து கொண்டே இருக்கிறார்கள். 108 ஆம்புலன்ஸ் வாகனங்களும் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன.

கூட்ட நெரிசலில் யாராவது மயங்கி விழுந்தால் அவர்களை உடனடியாக ஆஸ்பத்திரிகளுக்கு அழைத்துச் செல்ல முறையான இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு உள்ளது.

தீபாவளிக்கு இன்னும் புத்தாடை, பட்டாசு, இனிப்பு வகைகளை வாங்காதவர்கள் விடுமுறை நாளான நாளை (ஞாயிற்றுக் கிழமை) அனைத்து இடங்களிலும் அதிக அளவில் கூடுவார்கள் என்பதால் போலீசார் தேவையான கூடுதல் பாது காப்பு ஏற்பாடுகளையும் செய்துள்ளனர்.

குறிப்பாக தி.நகர் ரங்கநாதன் தெருவில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதேபோன்று ஒவ்வொரு மாவட்டங்களிலும் குறிப்பிட்ட பகுதிகளில் மக்கள் அதிக அளவில் கூடுவார்கள். அது போன்ற இடங்களில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகள் மேற்பார்வையில் கூடுதல் கண்காணிப்பு மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் தீபாவளியை மிகுந்த எச்சரிக்கையோடு பாதுகாப்பாக கொண்டாட வேண்டும் என்று போலீசார் கேட்டுக் கொண்டு உள்ளனர்.



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மாநகராட்சியில் ஆக்கிரமிப்பு பகுதியில் வசித்தவர்களுக்கு மாற்று இடமாக சேசம்பாடி அருகே மூப்பக்கோயில் அய்யன் திருவள்ளுவர் நகரில் இடம் வழங்கப்பட்டுள்ளதை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# தனது தொகுதிக்கு கூட எதையும் செய்யாமல் தேர்தல் ஜூரத்தால் எடப்பாடி பழனிசாமி உளறுகிறார் அமைச்சர்



சேலம், அக். 28

சேலத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் நிருபர்களிடம் கூறியதாவது:

சட்டமன்றத் தேர்தலின் போது பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்களை பரிசீலனை செய்து இதுவரை 90 சதவீத மனுக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சி வாரியாக மக்களை சந்தித்து மனுக்களை பெற்று வருகிறோம். கடந்த 10 ஆண்டுகளில் அமைச்சராகவும், முதலமைச்சராகவும் இருந்த எடப்பாடி பழனிசாமியின் சொந்த தொகுதியிலேயே தற்போது 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் குவிந்துள்ளன.

அவர் தனது தொகுதிக்கு கூட எதுவும் செய்யவில்லை. தற்போது தேர்தல் ஜூரம் வந்துவிட்டதால் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உளறிக் கொண்டிருக்கிறார். அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் தொடர்ந்து முதலமைச்சர் வழியில் மக்கள் பணிகளில் ஈடுபடுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மதுரையில் போர்க்கால அடிப்படையில் அனைத்து பணிகளும் நடந்து வருகிறது முதல்வர் தகவல்



சென்னை, அக். 28

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் வலை தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது:

மதுரை மாவட்டத்தில் நேற்று பெய்த கனமழையின் காரணமாக, மதுரை மாநகரின் பல்வேறு பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை அறிந்து, உடனடியாக அங்கு மீட்பு மற்றும்நிவாரணநடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வணிக வரித்துறை அமைச்சர் மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் ஆகியோரை அனுப்பி வைத்தேன்.

மேலும், மதுரை மாவட்ட கலெக்டரையும் தொடர்பு கொண்டு களநிலவரம் குறித்து அறிந்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தி உள்ளேன்.

குடியிருப்புப் பகுதிகளில் மழைநீரை வடிய வைக்கராட்சதமின்மோட்டார்களும் பொறியாளர்களும் பணியாளர்களும் அருகில் உள்ள நகராட்சிகளில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவ முகாம்கள் 20 இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் தேவையான வசதிகளுடன் மூன்று முகாம்களில் பாதுகாப்பாகத் தங்கவைக்கப் பட்டுள்ளனர். மாவட்டத்தின் கண்காணிப்பு அலுவலர் நேற்றே அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

தலைமைச் செயலாளர் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர் ஆகியோர் பணிகளைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். மதுரை மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் இயல்பு நிலையைக் கொண்டு வரப் போர்க்கால அடிப்படையில் அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

# பருவமழை முன்னேற்பாடுகளை சரிவர மேற்கொள்ளாததால் வெள்ள பாதிப்பு பொதுமக்கள் குற்றச்சாட்டு

மதுரை, அக். 28

வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பு தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நட வடிக்கையாக கால்வாய்கள் தூர்வாருதல், கண்மாய் கரைகளை பலப்படுத்துதல், வெள்ளம் பாதிக்கும் பகுதிகளை அடையாளம் காணுதல் உள்ளிட்ட பல்வேறு முன்னேற்பாடு பணிகள் நடைபெற்றன.

ஆனால் மதுரை மாவட்டத்தில் பருவகால முன்னேற்பாடு பணிகளுக்காக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என புகார்கள் எழுந்துள்ளது.

இதுகுறித்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கூறியதாவது:

கடந்த சில வாரங்களுக்கு முன்பு மதுரையை தவிர்த்து சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் பலத்த மழை கொட்டியது. இதையடுத்து அங்கு பல்வேறு முன்னேற்பாடுகள் நடைபெற்றன. ஆனால் அதனை பார்த்தாவது மதுரையில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கலாம். ஆனால் மாவட்ட நிர்வாகமும் மாநகராட்சியும் இந்த விவகாரத்தில் மெத்தனமாக இருந்தது.

கடந்த காலங்களில் மதுரை வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் கன மழை பெய்தபோது கண்மாய்கள், கால்வாய்கள் நிரம்பி தண்ணீர் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்தது. அப்போதே அதிகாரிகள் திட்டமிட்டு நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று வெள்ள பாதிப்பு ஏற்பட்டு இருக்காது.

செல்லூர்கண்மாய், ஆத்திக்குளம், புளியங்குளம் கண்மாய்கள் தூர்வாரப்படவில்லை. இதனால் குறைந்த நேரத்தில் பெய்த மழையால் தண்ணீர் நிரம்பி குடியிருப்புகளுக்குள் புகுந்துள்ளது. நகரில் உள்ள கால்வாய்களும் தூர்வாரப்படவில்லை. இதனால் மழைநீர் வெளியேறுவதற்கான வாய்ப்புகள் முற்றிலும் தடைபட்டது.

குறிப்பாக செல்லூர் கண்மாய் மற்றும் அங்கிருந்து வைகை ஆற்றுக்கு தண்ணீர் செல்லும் முக்கிய கால்வாயான பந்தல்குடி கால்வாய் தூர்வாரப்படாததால் குப்பை கூளமாகவும், செடிகொடி மரங்கள் வளர்ந்தும் காணப்பட்டது. மழை தொடங்கி தண்ணீர்குடியிருப்புகளை சூழ்ந்த பின்னரே மாநகராட்சி அதிகாரிகள் அவசர அவசரமாக குப்பைகளை அகற்றுதல் போன்ற தற்காலிக பணிகளை மட்டும் மேற்கொண்டனர்.

மழையால் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் மின்சாதன பொருட்கள் பழுதடைந்து உள்ளன. இதனால் எங்களுக்கு பொருளாதார ரீதியாகவும்பாதிப்புஏற்பட்டு உள்ளது.

செல்லூர், அய்யர் பங்களா, முல்லை நகர், கூடல் நகர் உள்ளிட்ட பகுதிகளில் சாலைகள் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் வீடுகளில் வெள்ள நீர் புகுவதற்கு முக்கிய காரணமாகி விட்டது. மழைகாலம் தொடங்குவதற்குள் சில மணி நேரம் கால்வாய்களை தூர்வாரி இருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. இப்போது குடும்பத்துடன் முகாம்களில் தங்கும்சூழல்ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# மாநாடு நடத்தும் நடிகர் விஜய்க்கு வாழ்த்துகள் கே.பி.முனுசாமி

கிருஷ்ணகிரி: அக்.28

அ.தி.மு.க. துணை பொதுச்செயலாளர்கே.பி. முனுசாமி எம்.எல்.ஏ. கிருஷ்ணகிரியில் நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

போதையின் பாதையில் இளைஞர்கள் சென்றுவிடக்கூடாது என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வீடியோ வெளியிட்டுள்ளார். இது குறித்து அறிவுரை வழங்க அவருக்கு தகுதியில்லை.

அதேபோல, கடந்தகால அ.தி.மு.க., அரசு மத்திய அரசிடம் தமிழகத்தை அடமானம் வைத்து விட்டதாகவும் பேசியுள்ளார்.

ஆனால் அ.தி.மு.க., அரசுதான் தமிழகத்தின் மதிப்பை உயர்த்தியது. அதனால்தான் மத்திய அரசுபல்வேறுதுறைகளில் தமிழகத்திற்கு முதலிடம் வழங்கியது.

மத்திய அரசின் திட்டங்களை ராஜதந்திரத்துடன் செயல்பட்டு முழுமையாக வாங்கி தந்தவர் எடப்பாடி பழனிசாமி.

ஆனால் தமிழகத்தில் 4 ஆண்டு ஆட்சி நடத்திவரும் தி.மு.க., அரசு அப்படியில்லை. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மத்திய அரசு குறித்து மேடையில் வீராப்பாக பேசிவிட்டு, தனியறையில் மோடியிடம் மண்டியிட்டு, மெட்ரோ திட்டத்திற்கு நிதி பெற்றுள்ளார். மத்திய அரசு ஆணையின்படியே, அமைச்சர் பொன்முடியின் துறை மாற்றப்பட்டது. கடந்த, அ.தி.மு.க., ஆட்சியில் தொடங்கப்பட்ட எண்ணேகொள்புதூர் வலது, இடது புற கால்வாய் நீட்டிப்பு பணி மந்தமாகியுள்ளது. நிதி ஒதுக்கவில்லை, நிலங்கள் கையகப்படுத்தப்படவில்லை.

இது குறித்து கலெக்டரிடம் தெரிவித்து சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு கடிதம் எழுதுமாறு வலியுறுத்தியுள்ளேன்.

தமிழக வெற்றிக்கழக மாநாட்டை முன்னிட்டு பெரியார் கட்அவுட் வைத்துள்ளனர். அவரில்லாமல் தமிழகத்தில் அரசியல் நடத்த முடியாது. மாநாடு நடத்தும் விஜய்க்கு வாழ்த்துகள்.

கடந்த காலங்களில் ஆந்திராவில் சிரஞ்சீவி இது போன்று பிரமாண்ட மாநாடு நடத்தி கட்சி தொடங்கினார். தற்போது நடிகர் விஜய்யும் அதே போன்று மாநாடு நடத்துகிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் அசோக்குமார் எம்.எல்.ஏ. மற்றும் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# விஜய் அரசியலில் சாதனை படைப்பார் மாநாட்டுக்கு வந்த பெண்கள் நம்பிக்கை

சென்னை, அக். 28

விஜய் மாநாட்டுக்கு தமிழகம், புதுச்சேரி மாநிலங்களில் இருந்து தொண்டர்கள் நிர்வாகிகள் வந்த வண்ணம் உள்ளனர்.

இது மட்டுமின்றி கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்தும் ரசிகர், ரசிகைகள், கட்சி தொண்டர்கள் மாநாட்டு திடலுக்கு இன்று காலை வந்துள்ளனர்.



மாநாட்டுக்கு பெங்களூருவில் இருந்து வந்த மோகன பிரியா, மோனிகா, ஐசு ஆகியோர் கையில் தளபதி என டாட்டூ குத்தி விக்கிரவாண்டிக்கு வந்தனர்.

வங்கியில் பணிபுரியும் மோகனப்பிரியா என்பவர் கூறியதாவது:

நான் சிறிய வயதில் இருந்தே விஜய்யின் தீவிர ரசிகை. அவர் கட்சி தொடங்கியதும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். கண்டிப்பாக அரசியலில் விஜய் பெரிய சாதனை படைப்பார்.

மக்களுக்காக பல நல்ல சேவைகளை செய்வார் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. அவர் அரசியல் கட்சி தொடங்கிய உடனே பெங்களூரு முகவரியில் இருந்து சென்னை பெரம்பூரில் உள்ள எனது பாட்டி வீட்டு முகவரிக்கு எனது முகவரியை மாற்றி விட்டேன். பெங்களூருவில் இருந்து இன்று காலை மாநாடு திடலை வந்து பார்க்கும்போது பிரமித்து விட்டேன். அந்த அளவுக்கு மாநாடு பந்தல் சிறப்பாக இருக்கிறது.

விஜய் பேச்சை நேரில் கேட்பதற்காக மிகுந்த எதிர்பார்ப்போடு காத்திருக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.


# மதுரை மழை பாதிப்பு... காணொலி மூலம் துணை முதலமைச்சர் ஆலோசனை

சென்னை, அக். 28

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த 2 வாரங்களுக்கு முன்பு தொடங்கியது. இதையடுத்து மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. வங்கக் கடலில் உருவான 'டானா' புயல் காரணமாக கடந்த சில நாட்களாக காற்றின் மாறுபாட்டால் தென் மாவட்டங்களில் மிதமான முதல் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக மதுரை மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக மாலை நேரங்களில் கனமழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று காலை முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பிற்பகலில் மதுரை மாநகரை கருமேகங்கள் சூழ்ந்தன. குளிர்ந்த காற்று வீச அதனை தொடர்ந்து மதுரைமாநகர்முழுவதும் கனமழை பெய்தது. நேற்று மாலை தொடங்கிய கனமழை இரவு வரை பெய்துள்ளது.

குறிப்பாக மதுரை மாநகரில் நேற்று வரலாறு காணாத அளவிற்கு மழை பெய்துள்ளது. 1955ம் ஆண்டுக்கு பிறகு தற்போது ஒரே நாளில் மட்டும் 11 சென்டிமீட்டர் மழை மதுரை மாநகரில் பதிவாகி உள்ளது. குறிப்பாக நேற்று மாலை ஒரு மணி நேரத்தில் மதுரை மாநகரில் மட்டும் 4.5 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது. குறைந்த மணி நேரத்தில் அதிகன மழை பெய்ததால் வெள்ள பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. இதனால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில்



வெள்ளம் சூழ்ந்தும், வீடுகளில் வெள்ளம் புகுந்ததால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மதுரையில் கனமழை பாதிப்பு குறித்து காணொலிக் காட்சி வாயிலாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டார்.

அப்போது, தொடர்ந்து மழை பெய்தாலும், அதனை எதிர்கொள்வதற்கு ஏதுவாக எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தாழ்வான பகுதியில் உள்ள பொது மக்களை, தேவை இருப்பின் தற்காலிக நிவாரண முகாம்களுக்கு அழைத்துச் செல்ல அறிவுறுத்தினார்.

சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து செயல்பட்டு மழைத்தொடர்பாக மதுரை மக்கள் முன் வைக்கின்ற கோரிக்கைகளுக்கு தீர்வு காணுமாறு ஆலோசனை வழங்கினார்.

# வாழ்நாளும் போனாலும் உன்னோடுதான் ப்ளடி பெக்கர் படத்தின் பொன்மாயமே பாடல் வெளியீடு

இயக்குனர் நெல்சன் தயாரிப்பில் கவின் `ப்ளடி பெக்கர்' படத்தில் கதாநாயகனாக நடித்துள்ளார். இப்படத்தை அறிமுக இயக்குனரான சிவபாலன் முத்துகுமார் இயக்கியுள்ளார். இவர் இதற்கு முன் நெல்சன் திலிப்குமாரிடம் உதவி இயக்குனராக பணியாற்றியுள்ளார்.




திரைப்படம் வரும் அக்டோபர் 31 ஆம் தேதி தீபாவளியை முன்னிட்டு வெளியாகவுள்ளது. இப்படத்திற்கு ஜென் மார்டின் இசையமைத்துள்ளார்.

இப்படத்தில் கவினுடன் ரெடின் கிங்ஸ்லி, மாருதி பிரகாஷ்ராஜ், சுனில் சுகாதா, அக்ஷயா ஹரிஹரன் மற்றும் பலர் நடித்துள்ளனர். படத்தின் டிரைலர் அண்மையில் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

படத்தின் ப்ரோமோஷன் பணிகள் தீவிரமாக நடைப்பெற்று வருகிறது. படத்திற்கு தணிக்கை குழு யூ/ஏ சான்றிதழை வழங்கியுள்ளது. படத்தின் நீளம் 2 மணி நேரம் 30 நிமிடங்களாகும்.

படத்தின் ப்ரோமோ பாடலான பெக்கர் வாலா பாடல் சில நாட்களுக்கு முன் வெளியானது . திரைப்படம் வெளியாக இன்னும் 4 நாட்களே உள்ளன. இந்நிலையில் படத்தின் அடுத்த பாடலான பொன்மாயமே ப்பாடலின் லிரிக் வீடியோ வெளியாகியுள்ளது.

பாடலின் வரிகளை விவேக் மற்றும் விஷ்ணு எடாவன் எழுத சத்ய நாரயணன் பாடியுள்ளார். இப்பாடல் மிகவும் மெலடியாக, எமோஷனலாக உள்ளது.

# 2025 ஐ.பி.எல். போட்டியில் டோனி விளையாடுவாரா? உறுதிப்படுத்திய சி.எஸ்.கே.

ஐ.பி.எல். மெகா ஏலம் நவம்பர் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் சவுதி அரேபியாவில் உள்ள ரியாத் நகரில் நடைபெற இருக்கிறது.



மெகா ஏலத்துக்காக முன்பாக ஒவ்வொரு அணியும் தங்களுக்கு தேவையான வீரர்களை தக்க வைத்துக் கொள்வதற்கான விதிமுறைகள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. அதன்படி ஒரு அணி அதிகபட்சமாக தங்களது அணியில் 6 வீரர்களை தக்க வைத்துக் கொள்ளலாம். தக்க வைக்கும் வீரர்களின் பட்டியலை சமர்ப்பிக்க வருகிற 31ந் தேதி கடைசி நாளாகும்.

இதன் காரணமாக 31 ந் தேதி மாலை 5 மணிக்குள் அனைத்து அணிகளும் தங்களது அணியில் தக்க வைக்கும் வீரர்களின் பட்டியலை வெளியிடும். அனைத்து அணிகளும் தங்களது அணியில் தக்க வைக்கும் வீரர்களின் பட்டியலை தயார்படுத்தி வருகின்றன.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை பொறுத்தவரையில் யார்யார்? தக்க வைக்கப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் இடையே எழுந்துள்ளது. ஓய்வு முடிவை அறிவிக்க தயாராகியுள்ள டோனி 2025 ஐ.பி.எல். தொடரில் விளையாட வேண்டும் என்று ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த்துள்ளனர். அவர் ஆடுவது குறித்து எந்த தகவல் அளிக்காத நிலையில் வருகிற 29 மற்றும் 30ந் தேதிகளில் டோனியை சந்தித்து பேச சி.எஸ்.கே. நிர்வாகம் முடிவு செய்து உள்ளது.

இதற்கிடையே சி.எஸ்.கே. அணியில் தக்க வைக்கப்படும் வீரர்களின் பட்டியல் சமூக வலைதளங்களில் கசிந்துள்ளது. ஜடேஜா, ருதுராஜ் கெய்க்வாட், பதிரானா ஆகிய வரிசைகளில் 3 வீரர்களை தக்க வைக்க முடிவு செய்து உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், டோனியை உள்ளூர் வீரராக தக்க வைத்துக் கொள்ள இருப்பதாக கூறப்படுகிறது. இதன்மூலம், டோனி 2025 ஐ.பி.எல். தொடரில் விளையாடுவது உறுதியாகியுள்ளது.

சி.எஸ்.கே. தலைமை நிர்வாகி அதிகாரி கே.எஸ். விஸ்வநாதனும் இதை உறுதி செய்தார். அவர் கூறும் போது 'டோனி விளையாட தயாராக இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது' என்றார்.

இது குறித்த அதிகாரப் பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

# விஜய் ஊழலுக்கும் எதிராக செயல்படப்போவதாக அறிவித்திருப்பதை வரவேற்கிறேன் பா. ரஞ்சித்




விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் உள்ள வி.சாலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு பிரம்மாண்டமாக நடைப்பெற்றது. தவெக மாநாடு நடைபெறும் திடலுக்கு விஜய் வருகை தந்தார். அவருக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மாநாட்டு திடலில் ராம்ப்ல் நடந்து சென்ற விஜய்யை நோக்கி தொண்டர்கள் கட்சி துண்டை வீசிய நிலையில், அதனை தனது கழுத்தில் அன்போடு அணிந்தபடி விஜய் நடந்து சென்றார்.

விஜய் அவரது கட்சி கொள்கை மற்றும் அரசியல் சிந்தனைகளை தொண்டர்கள் முன் ஆவேச உரையாற்றினார். இவரது முதல் அரசியல் மாநாட்டிற்கு பல திரைப்பிரபலங்கள் வாழ்த்து தெரிவித்து இருந்தனர்.

அதைத்தொடர்ந்து தற்பொழுது இயக்குனர் பா.ரஞ்சித் நடிகர் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்து அவரது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில் அவர் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் " என்கிற புவியியல் அமைப்பின் அடிப்படையான தத்துவத்தை தாங்கி தன் முதல் அரசியல் கன்னி பேச்சை முடித்திருக்கும் #தமிழகவெற்றிக்கழகம் தலைவர் திரு. விஜய் அண்ணா அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள்! "ஆட்சியிலும் பங்கு அதிகாரத்திலும் பங்கு " மற்றும் சாதி மத வர்க பிரிவினை வாதத்திற்க்கும் ஊழலுக்கும் எதிராக செயல்படப்போவதாக அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். மகிழ்ச்சி" என பதிவிட்டுள்ளார்.

# உலக டேபிள் டென்னிஸ் காலிறுதிக்கு தகுதி பெற்ற முதல் இந்திய வீராங்கனை மணிகா பத்ரா சாதனை




உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஸ் போட்டி பிரான்சில் உள்ள மான்ட்பெல்லிர் நகரில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் 30வது இடத்தில் இருக்கும் இந்திய வீராங்கனை மணிகா பத்ரா 11-9, 6-11, 13-11, 11-9 என்ற செட் கணக்கில் தரவரிசையில் 14வது இடத்தில் உள்ள பெர்னாடெட் சோக்சை (ருமேனியா) வீழ்த்தி கால்இறுதிக்கு முன்னேறினார். கால்இறுதியில் மணிகா பத்ரா, சீனாவின் கியான் தியானியை எதிர்கொள்கிறார்.

இந்த வெற்றியின் மூலம் உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஸ் போட்டியில் காலிறுதிக்கு தகுதி பெற்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை பத்ரா பெற்றார்.

முன்னதாக நடந்த முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய வீராங்கனை ஸ்ரீஜா அகுலா 11-6, 7-11, 1-11, 11-8, 8-11 என்ற செட் கணக்கில் 13ம் நிலை வீராங்கனையான அட்ரியானா டியாசிடம் (பியூர்டோரிகோ) பணிந்தார்.

# டேவிட் வார்னருக்கு புஷ்பா ஸ்டைலில் பிறந்தநாள் வாழ்த்து கூறிய அல்லு அர்ஜுன்

தெலுங்கில் முன்னணி நடிகராக இருக்கும் அல்லு அர்ஜுன் 'புஷ்பா' பட வெற்றிக்கு பிறகு பான் இந்தியா ஹீரோவாக மாறியுள்ளார். குறிப்பாக இவரது நடனத்திற்கு இந்திய அளவில் ரசிகர்கள் இருக்கிறார்கள்.

புஷ்பா படம் இந்திய ரசிகர்களை மட்டுமில்லாமல் ஆந்திரேலிய கிரிக்கெட் வீரர் டேவிட் வார்னரையும் வெகுவாக கவர்ந்தது. புஷ்பா பட காட்சிகளை வார்னர் ரீல்ஸ் செய்து வெளியிட்டது இணையத்தில் வைரலானது.

இந்நிலையில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் டேவிட் வார்னரின் பிறந்தநாளுக்கு வாழ்த்து தெரிவித்து அல்லு அர்ஜுன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். புஷ்பா ஸ்டைலில் வார்னர் இருக்கும் புகைப்படத்தை பகிர்ந்துள்ள அல்லு அர்ஜுன், "எனது சகோதரருக்கு மகிழ்ச்சியான பிறந்தநாள் வாழ்த்துக்கள்" என்று பதிவிட்டுள்ளார்.

# உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்: புள்ளிப்பட்டியலில் முன்னேறிய நியூசிலாந்து

இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2வது டெஸ்ட் போட்டி புனேவில் நடந்தது. இதில் நியூசிலாந்து அணி 113 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்துடன் டெஸ்ட் தொடரை 20 என கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில், இந்த டெஸ்ட் தொடருக்கு பிறகு உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டது. இதில் 12 போட்டிகளில் விளையாடியுள்ள இந்தியா 8 போட்டிகளில் வெற்றி, 4 போட்டிகளில் தோல்வி என 62.82 சதவீதத்துடன் புள்ளிப் பட்டியலில் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறது. ஆஸ்திரேலியா 2வது இடத்திலும், இலங்கை 3வது இடத்திலும் நீடிக்கிறது. இந்தியாவுக்கு எதிராக வெற்றி பெற்ற நியூசிலாந்து (50.00 சதவீதம்) ஒரு இடம் முன்னேறி 4வது இடத்தில் உள்ளது.

தென் ஆப்பிரிக்கா 5வது இடத்திலும், இங்கிலாந்து 6வது இடத்திலும் உள்ளன. பாகிஸ்தான், வங்கதேசம், வெஸ்ட் இண்டீஸ் ஆகியவை 7, 8, 9ம் இடத்தில் உள்ளன.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.